இந்த மருத்துவமனையை ஒப்பெரும் மையமாக (Centre of Excellence) அறிவித்தது. இம்மருத்துவமனை 2009 ஆம் ஆண்டு மைய காசநோய்ப் பிரிவு (Central TB Division) டாட்ஸ் கூடுதல் சிகிச்சை மையமாக (Dots Plus Centre for MDR TB) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மருத்துவமனை வளாகத்தை மேலும் மேம்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

(பேரவைக் கூட்டத் தொடர் முடியும்வரை தொடர்புடைய உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்யப் பெற்றுள்ளதால் வரிசை எண்கள் 3, 7, 8, 9, 10, 21, 22, 35, 36, 37, 38, 40, 41, 46, 47, 55, 56, 57, 58, 60, 65, 67, 68, 69, 70, 71, 72, 73, 74, 75, 76, 77, 90, 91, 92, 93, 94, 95, 96 தொடர்புடைய வினாக்கள்-விடைகள் இப்பட்டியலில் இடம் பெறவில்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்பு இதே அவையில் மௌலிவாக்கத்தில் கட்டடம் இடிந்த சம்பவம் குறித்து. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஓர் அறிவிப்பை என்னிடத்தில் கொடுத்திருக்கிறீர்கள். அதற்குரிய நடவடிக்கை உரிய விதிகளின்படி எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) அதுகுறித்து விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் இப்பொழுதுதான் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அதுசம்பந்தமாகப் பேச முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், சொல்லுங்கள்.

2015 செப்டம்பர் 2]

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் 12 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு மிகப் பெரிய பொது வேலைநிறுத்தம் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே அதுகுறித்தும் விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

முற்பகல் 11-15

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தியா முழுவதும் பொது வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. தமிழக அரசு ஏற்கெனவே சாலைப் பாதுகாப்பு மசோதா, G.S.T. விவசாயிகளுக்கு மானியத்தை வெட்டுவது, கல்வி, சுகாதாரத்திற்கு மானியத்தை வெட்டுவது போன்ற பல்வேறு பிரச்சினைகளில் மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடுகளைக் கண்டித்து, மாநில அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. அந்தப் பிரச்சினைகளுக்காகவும், மத்திய அரசாங்கத்தை எதிர்த்தும், வேலைநிறுத்தத்தை ஆதரித்தும் இந்த அவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மத்திய அரசாங்கத்தை எதிர்த்து, நாடு முழுவதும் இருக்கக்கூடிய 15 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றார்கள். மத்திய அரசு கொண்டுவந்துள்ள சாலைப் பாதுகாப்பு மசோதா, தொழிலாளர் நலச் சட்டங்கள் சீர்திருத்தம் என்ற பெயரால் தொழிலாளர்களுடைய நலன்களை நீர்த்துபோகச் செய்வது, அமைப்புசாராத் தொழிலாளர்களுடைய பல்வேறு பிரச்சினைகள், தொழிற்சங்கம் தொடங்கும் சட்டத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்பு இல்லை, அவையினுடைய கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எம். ஆறுமுகம், சொல்லுங்கள்.*

[2015 செப்டம்பர் 2

திரு. எம். ஆறுமுகம்: விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தத் தவறியது, விவசாயத் தொழிலாளர்களுடைய 100 நாட்கள் வேலையை முடக்கியுள்ளது, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குக் கட்டுப்படியாகும் விலையை நிர்ணயிப்பது போன்ற 12 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. எனவே, மத்திய அரசாங்கத்தை எதிர்த்து, இந்த அவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே திரு. நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான ஆட்சியில், வெறும் முதலாளிகளுக்கு ஆதரவான சட்டங்களைக் கொண்டுவந்திருக்கின்றார்கள். அவற்றில் பலவற்றைத் தமிழக அரசும் கண்டித்திருக்கின்றது. 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, இன்று நாடு முழுவதும் வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த அவையிலே அதுகுறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நாடெங்கும் நடைபெறக்கூடிய தொழிலாளர்களுடைய போராட்டம் குறித்து இந்த அவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய அரசின் மக்கள் விரோதப் போக்கினைக் கண்டித்து, 12 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, பொது வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலும், குறிப்பாக, சாலைப் பாதுகாப்பு மசோதாவின்மூலமாக மாநில அரசின் உரிமைகளைக்கூட ஒரு சில இடங்களில் பறிக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, இந்த மசோதாவைக் கண்டித்தும்,

2015 செப்டம்பர் 2] [திரு. அ. கணேஷ்குமார்]

தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு வலுசேர்க்கும் வகையிலும், மத்திய அரசைக் கண்டித்து, இந்த அவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கட்சியிலே இரண்டு உறுப்பினர்களும் பேச வாய்ப்புக் கேட்டால் எப்படி? (குறுக்கீடு) இது சரியாக இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ்தான் முதலில் கேட்டார். அவருக்கு முதலில் வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடு) இல்லை, திரு. பிரின்ஸ்தான் முதலில் கேட்டார். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் மானியக் கோரிக்கையின்போது பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திங்கள்நகரில் இருக்கக்கூடிய பேருந்து நிலையம் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது. மேல் சுவரெல்லாம் உடைந்து கொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்தப் பகுதியிலே ஒரு புதிய பேருந்து நிலையம் கட்ட வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

3. கவன ஈர்ப்பு

சென்னை உட்பட தமிழகத்தின் சில பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. இ. பெரியசாமி, திரு. எ.வ. வேலு, திரு. ஜெ. அன்பழகன், திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. பி.எல். சுந்தரம், திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வீபி. நாகைமாலி, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. ஜேஜி. பிரின்ஸ்,